29th September 1961]

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : நகரசபை எல்லைக்குள் இருக்கிற ஆஸ்பத்திரிகள் நீண்டகாலமாக தொத்து நோய்களுக்கு என்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் தொத்து நோயாளிகளை அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை கொடுக்கப்பட்டு வருகிறது. அவைகள் நகரசபை எல்லைக்குள் இருப்பதால் நகரசபைகளே கட்டிடங்களைக் கட்டிக் கொடுத்து இருக்கிறது. ஆனால் இன்றையதினம் ஆஸ்பத்திரிகளிலுள்ள தொத்து நோய்கள், அதாவது, காலரா, வாந்தி பேதி போன்ற நோயாளிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். அங்குள்ள நோயாளிகளுக்கு சிகிச்சைகள் கொடுக்கப்படுகிறது. அவை ரொம்பவும் மோசமாக இருக்கின்றன. கட்டிடங்களும் ரொம்பவும் பழுதடைந்திருக்கின்றன. அதை ரிப்பேர் செய்ய வேண்டுமென்றால் தங்களுக்குப் பொறுப்பில்லை என்று நகரசபைகள் சொல்லிவிடுகின்றன. அவர்களைக் கேட்டால் அரசாங்கம் செய்ய வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இது எப்படி இருக்கிறது என்றால் இரண்டு ஆட்டில் ஊட்டிய குட்டிபோல் இருக்கிறது. ஆகவே சர்க்காரே எடுத்து அதை நல்ல முறையில் பழுது பார்த்து அதை நல்ல முறையில் உபயோகத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர் ஏதோ இரண்டு ஆட்டைப்பற்றிச் சொன்னார். அது எனக்குத் தெரியாது. அது எனக்குப் புரியவில்லை. அந்தக் கட்டிடங்களை ஸ்தல ஸ்தாபனங்கள் கட்டுவதாக இருந்தாலும் அதற்கு ஐம்பது பர்செண்ட் சப்சிடி அரசாங்கம் கொடுக்கிறது. மற்றவைகள் கொடுப்பது கிடையாது. மெயின்டினென்சுக்கும் அரசாங்கம் அவ்வப்போது உதவி செய்துகொண்டுதான் வருகிறது. அதைக் கட்ட வேண்டிய பொறுப்பு நகரசபையினதுதான். அந்த ஆஸ்பத்திரி நகரசபையில் இருப்பதால் நகரசபை நகர சுகாதாரத்தைக் கவனிப்பதால் நகரசபைதான் எல்லாப் பொறுப்புகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். எந்த அளவு அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமோ அந்த அளவில் செய்துகொண்டுதான் வருகிறது. இப்பொழுது இருக்கக்கூடிய 22 ப்ரைமரி ஹெல்த் சென்டர்களிலும் இப்படிப்பட்ட ஏற்பாடுதான் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய திட்டமும் இடப்பட்டிருக்கிறது. அதற்கு என்று ஒரு லட்சம் ரூபாய்கூட ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI M. K. SOMASUNDARAM : இம்மாதிரி பெரிய தொத்து நோய் ஆஸ்பத்திரிகள் எல்லாம் நகரங்களுக்கு வெளியேயும் சில இடங்களில் நகரத்திலேயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சில இடங்களில் ஷெட்கள் அமைத்து அதில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஊருக்கு வெளியே இருக்கக்கூடியவைகள் நல்ல முறையில் நடப்பதாகத் தெரியவில்லை. அவைகளையும் நல்லமுறையில் நடத்தும்படி சர்க்கார் ஏதாவது உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : சில இடங்களில் வெளியே அலாதியாக இருக்கிறது. சில இடங்களில் ஆஸ்பத்திரி காம்பவுண்டுக்குள்ளேயே இருக்கின்றன. இவைகள் ஆஸ்பத்திரிகளுக்கு அருகாமையில் இருப்பதால் அவைகளை எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பை ஒரு கேள்வியின் மூலமாகப் பதில் அளிப்பதற்கில்லை. இதைப் பற்றிப் பரிசீலனை செய்துதான் பார்க்க வேண்டும். ஆனால் அதை நடத்தும் பொறுப்பு அவர்களிடம் இருக்கிறது. அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் அரசாங்கம் அதன் பொறுப்பை எடுத்துக்கொண்டு வருகிறது.

Handloom and mill cloths

* 1908 *Q.*—SRI T. T. DANIEL :
SRI N. K. PALANISAMI : } Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the State Government have made any representations to the Central Government to demarcate the sphere of production of textiles between handloom and mills;

[29th September 1961

(*b*) whether the State Government have suggested to the Central Government that production of sarees and dhoties should be wholly reserved for the handloom sphere ;

(*c*) the total quantity of handloom textile now stagnated in our State;

(*d*) whether the handloom weavers are affected by the stagnation ; and

(*e*) what are the relief granted to them?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) and (*b*) No, Sir. Not after November 1952.

(*c*) Goods worth Rs. 18·51 lakhs, which represents 9 per cent of the total stocks (excluding bleeding Madras variety) have accumulated in the normal course with the co-operative sector of the handloom industry. The value of stocks of Bleeding Madras within and outside the co-operative sector was estimated at Rs. 27·72 lakhs. Particulars of stocks of other varieties of handloom cloth held by industry outside the co-operative fold are not available.

(*d*) Weavers of Bleeding Madras have been affected.

(*e*) At the instance of this Government, the Government of India have arranged to procure the accumulated stocks of "Bleeding Madras" through the Handloom Export Organisation.

SRI N. K. PALANISAMI : 1953–ம் வருஷம் இந்தச் சபையில் ஒரு தீர்மானம் போட்டு நிறைவேற்றி அது மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டது. அதைப் பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்தி நடவடிக்கை எடுத்துக்கொள்ளச் சொல்லக் கூடாதா ? அதை அமுல் நடத்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : இந்த சபை ஒரு தீர்மானம் போட்டு அதை நிறைவேற்றி அதை மத்திய சர்க்காருக்கு அனுப்பியது. அதன்மேல் மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டு இந்த அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி அதன்மேல் என்னென்ன ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்கலாம் என்று நிர்ணயம் செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அந்த முடிவுதான் இதுவரையில் அமுலில் இருந்துவருகிறது.

SRI A. GOVINDASAMY : ப்ளீடிங் மெட்ரூஸ் ரகத்தை உற்பத்தி செய்யக்கூடிய நெசவாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் தெரிவித்தார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் என்ன உதவி செய்திருக்கிறது ? மீண்டும் அந்தத் தொழிலை நல்ல முறையில் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : அவர்களிடமுள்ள இந்த ஸ்டாக்கை, வாங்குவதற்கு மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

SRI M. R. KANDASWAMI MUDALIAR : கைத்தறிக்கு சேலை வேஷ்டிகளை ஒதுக்கினால் அதன் மூலம் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும். அதன்மேல் அவர்கள் மில் துணியுடன் போட்டி போடலாம், மில்லுடன் இருக்கக்கூடிய போட்டிகள், தொந்தரவுகள் அவ்வளவாக இருக்காது. அவர்கள் அதன்மேல் நல்லபடியாக வாழ முடியும் என்று மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு மீண்டும் இதைப்பற்றி வற்புறுத்தி அதை உடனடியாக அமுல் நடத்த வேண்டிய ஏற்பாடு செய்வார்களா ? அல்லது இனிமேலாவது எடுக்க முயற்சிப்பார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : கைத்தறிக்கு எந்தெந்த ரகங்களை ஒதுக்குவது என்று பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அந்த முடிவுதான் இப்பொழுது அமுலில் இருக்கிறது.

29th September 1961]

Sri P. U. SHANMUGAM : கைத்தறிக்கு எந்தெந்த ரகங்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri V. RAMAIAH : சென்ற வாரம்தான் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் அதைப் பற்றிய விவரத்தைச் சொன்னேன். அது ஒரு நீண்ட பட்டியல். அந்த நீண்ட பட்டியலை திரும்பப் படிக்க வேண்டியதாக இருக்கிறது. வேண்டுமானால் படிக்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : தேங்கி இருக்கக்கூடிய சரக்குகளை மத்திய அரசாங்கம் வாங்கிக்கொள்ளும் என்றும், இன்னும் சில துணிகளை கூட்டுறவு சங்கங்கள் வாங்கிக்கொள்ளும் என்றும் இடைக்கால நிவாரணமாக சொல்லப்பட்டது. இந்த விஷயம் எவ்வாறு யோசனையில் இருக்கிறது. துணிகளை ஒதுக்குவதைத் தவிர வேறு ஏதாவது யோசனைகள் இருக்கின்றனவா ?

The Hon. Sri V. RAMAIAH : தேங்கி இருக்கும் சரக்குகளாகிய ப்ளீடிங் மெட்ருலை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மற்ற துணிகளை கூட்டுறவு சங்கங்கள் மூலமாக வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri K. VINAYAKAM : Saris and dhoties manufactured by the handloom industries do not compare well either in texture, appearance or even in price with those manufactured by the Mills. Keeping that in view, the Madras Legislative Assembly had previously recommended to the Central Government in the former days through a Resolution passed by the House that these two varieties of cloth should be absolutely reserved for the Handloom Industry. May I know what happened to that recommendation made to the Central Government? Did the Central Government accept our suggestion, or did they reject it? I would like the Hon. Minister to give a categorical answer in the matter so as to clear the misapprohesion that has been created in our State on this important issue.

The Hon. Sri V. RAMAIAH : Sir, that Resolution of the Honourable House was carefully considered by the Government of India. With a view to helping the handloom industry, they have reserved certain varieties for production by the handloom sector. I would like to read the list of those varieties, though it is a bit long, so that the House can have an idea of the exact position in regard to this matter.

1. (*a*) Dhoties with borders which contain coloured yarn exceeding ¼'' in width.

(*b*) dhoties with borders made of zari, muga or artsilk yarn.

2. Lungi, sarong of gamcha with a check pattern or any cloth with check pattern having a width between 42" and 52" from which lungies, sarongs or gamchas may be made.

3. (*a*) Checked or striped chadder (a kind o fshawn called by that name in West Bengal).

(*b*) bedsheets with coloured woven borders length-wise or breadth-wise.

[29th September 1961

(*c*) bedcovers with decorative or coloured effect.

(*d*) Counterpane (any other outer covering of bed woven in raised figures) other than one having overall dobby or jacquard design.

4. Low reed pick cloth.

5. Table cloth and napkins other than domask bleached cloth.

6. Duster or duster cloth or wiper cloth or glass cloth.

7. Coarse cloth of plain weave with warp or weft of counts 8's and below.

8. (*a*) Sarees with border exceeding 2½" in width.

(*b*) Sarees with borders containing real or imitation zari.

(*c*) Sarees with coloured yarn in the body.

(*d*) Sarees with heading exceeding 9" in width.

9. (*a*) Towels or towelling cloth in honey-comb weave.

(*b*) Erazha Thorthu (towel of plain weave commonly known by the name in the States of Madras and Kerala).

10. Mashru cloth, i.e., cloth in satin weave with silk or rayon warp and cotton weft and having characteristics of coloured stripes.

Sri K. B. S. MANI : கைத்தறி நெசவாளர்களுக்கு ரிபேட் கொடுக்கின்ற வழக்கத்தை எவ்வளவு நாளைக்கு அரசாங்கம் நீடிக்கலாம் என்று நினைக்கிறது ? அதில் ஒரு முடிவு கட்டுவதற்குத் தீர்மானமான ஒரு காரியம் செய்யப்படுமா ?

DEPUTY SPEAKER : இந்த உப கேள்வியை அடுத்த கேள்வியில் கேட்கலாம்.

Sri N. K. PALANISAMI : ஒரு பக்கம் நூல் விலை ஏறிக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாக நெசவாளர்கள் கூலி குறைகிறது. அதே சமயத்தில் ரிபேட்டும் குறைத்திருக்கிறார்கள். கூலி குறைவாகக் கொடுத்து, கைத்தறித் துணிக்கு அதிகப்படியான விலை ஏற்றுவதன் மூலமாக மில் முதலாளிக்குச் சாதகமான நிலைமை ஏற்படுகிறது. இப்படி, கைத்தறிக்கு ஒரு நெருக்கடியை சர்க்கார் உண்டுபண்ணுவதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri V. RAMAIAH : Sir, this supplementary does not arise from the main question.

Sri K. R. NALLASIVAM : ப்ளீடிங் மெட்றாஸை நெசவாளர்களே உற்பத்தி செய்கிறார்களா ? வேறு யாராவது விடுத்த வேண்டுகோளின்பேரில் உற்பத்தி செய்கிறார்களா ? அப்படியானால், என் இது தேங்கிக்கிடக்கிறது ?

The Hon. Sri V. RAMAIAH : ப்ளீடிங் மெட்ராஸ் இரண்டு வருஷங்களுக்கு முன்னால் ரொம்ப பரபரப்பான கட்டத்திலே இருந்தது. இதற்கு மோகம் அமெரிக்காவில் ஏற்பட்டது. அந்த மோகத்தை ஏற்படுத்தியவர்கள், நமது நாட்டிலிருந்து போன கைத்தறி விற்பனைத் தூதுக் குழுவினர்களும், மற்றும் இவர்களைப் போன்றவர்களும். அந்தத் துணிக்கு அமெரிக்காவிலே பெரிய கிராக்கி ஏற்பட்டவுடனே, இவர்கள் கொடுத்த ஒப்பந்தத்தைக் காட்டிலும், தனிப்பட்ட முறையில் நெசவு நடத்தக்கூடிய

29th September 1961]

வர்கள் போட்டிக்காக கொஞ்சம் விலையைக்குறைத்து, அந்தத் துணியை அங்கே ஏற்றுமதி செய்ய முயற்சி எடுத்தார்கள். ஆனல், இந்தத் துணி அங்கே போனவுடனே, துணி மீதிருந்த மோகமே குறைந்துவிட்டது. காரணம், தரம் ரொம்பக் கம்மியாக இருந்தது. அதனுல் இந்த நெசவு பாதிக்கப்பட்டது.

Handloom (payment of rebate)

* 1909 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the Government have received any amount from the Centre for payment towards arrears of rebates to be paid to the handloom weavers?

THE HON. SRI V. RAMAIAH : Yes, Sir.

SRI N. K. PALANISAMI : ஸெஸ் பண்டிலிருந்து நம் மாநிலத்திற்கு எவ்வளவு தொகை கிடைக்கிறது? அதிலிருந்து ரிபேட் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : ரிபேட் கொடுப்பதற்கு, மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு இரண்டு தவணைகளாகப் பணம் வந்தது. முதல் தவணையில் 7.24 லட்ச ரூபாயும், இரண்டாவது தவணையில் 107.95 லட்ச ரூபாயும் வந்தது.

SRI A. R. SUBBIAH MUDALIYAR : ரிபேட் கொடுப்பதிலே ஒழுங் கினம் இருப்பதாகக் கண்டு, அனேக பரிசீலனை செய்யப்பட்டு, ஒவ்வொரு சொஸைட்டிக்கும் பெய்டு செக்ரடரி போட வேண்டுமென்ற ஒரு திட்டம் இருக்கிறதே, அது எந்த நிலைமையில் இருக்கிறது ?

THE HON SRI V. RAMAIAH : ரிபேட் கொடுப்பதிலே ஒழுங்கினம் கிடையாது. ஆனல், சில சொஸைட்டிகள் தவருன புள்ளிவிவரங்கள் கணக்குகள் கொடுத்து அதிகமாக ரிபேட் வாங்க முயற்சி எடுத்தார்கள். அது போன்று தவருக நடந்துகொண்ட சொஸைட்டிகளுக்கு உடனே கொடுக்காமல், அவைகளினுடைய கணக்குகள் பூராவையும் பரிசீலனை செய்து ரிபேட் கொடுப்பது என்று முடிவு எடுத்தார்கள்.

SRI K. B. S. MANI : ரிபேட் கொடுப்பது என்பது, பிச்சை போடுகிற மாதிரி, பரம்பரைப் பழக்கமாக வந்துவிடுகிறது. அவர்களுக்கு நிரந்தரமான உதவி அளித்து, மற்றவர்கள் தயவை எதிர்பார்க்காமல் அவர்களே கொஞ்சங்கொஞ்சமாக முன்னேறி வர அரசாங்கம் வழி வகுக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : இதிலே பிச்சை போடுவது எப்படி வருகிறது என்று எனக்கே தெரியவில்லை. பிச்சை இதிலே யாருக்கும் கொடுக்கவில்லை. அந்தத் தொழில் நசித்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்தது. ஏனென்றல், அதிலே ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டிருக்கிறர்கள். அதனுல், அதற்கு வேண்டிய உதவியை எப்போதுமே அரசாங்கம் கொடுக்கத் தயங்காது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM : In the matter of clearance of the rebate due to the societies, are the Government aware of the fact that the societies in the Tiruttani taluk which came over from Andhra Pradesh to the Madras State have not yet received the rebate amount which is in heavy arrears for about 2 years. That is even before the merger of that taluk with Madras, they were not paid the amount. Now, even after the lapse of $1\frac{1}{2}$ years since the